## 12-ம் வகுப்பு உயிரி-விளங்கியல்

## 7 மனித நலன் மற்றும் நோய்கள்

1. பிளாஸ்மோடியத்தின் பாலினப்பெருக்க நிலை எங்கு நடைபெறும்? (AIIMS 2013)

1. கொசுவின் உமிழ்நீர் சுரப்பி
2. மனித இரத்த சிவப்பணுக்கள்
3. கொசுவின் குடலில்
4. மனித கல்லீரலில்

2. பின்வரும் கூற்றுகளில் எந்த ஒன்று சரியானது ? (AIMPT 2009 P)

1. வீரியம் மிக்க கட்டிகள் மெட்டாஸ்டாசிஸை வெளிப்படுத்தலாம்
2. அறுவை சிகிச்சை செய்து கொண்ட நோயாளிகளுக்கு வலியைப் போக்க கன்னாபினாய்டுகள் கொடுக்கப்படுகிறது.
3. தீங்கற்ற கட்டிகள் மெட்டாஸ்டாசிஸின் பண்புகளை காட்டுகின்றன.
4. ஹெராயின் உடல் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கிறது.

3. கீழ்கண்டவற்றுள் ஒரு ஜோடி வைரஸ் நோய் எது ? (AIMPT 2009 P)

1. டையாய்டு, காசநோய்
2. ரிங்வாம், எய்ட்ஸ்
3. சாதாரணசளி, எய்ட்ஸ்
4. வயிற்று போக்கு, சாதாரண சளி

4. டெட்டனஸ் ஏற்பட வாய்ப்புள்ள ஒருவருக்கு தடுப்பூசி போடுவதன் மூலம் செலுத்தப்படுவது? (AIMPT 2009 P)

1. பலவீனமான கிருமிகள்
2. இறந்த கிருமிகள்
3. முன் தயாரிக்கப்பட்ட ஆண்டிபாடிகள்
4. பரந்த அளவிளான நுண்ணுயிர் எதிர்ப்பிகள்

5. ஆண்டி ஹிஸ்டமின் மற்றும் ஸ்டீராய்டு பயன்படுத்துவதால் கீழ்கண்ட எவற்றிற்கு விரைவாக நிவாரணம் கிடைக்கிறது? (AIMPT 2009 P)

1. தலைவலி 2. ஒவ்வாமை 3. குமட்டல் 4. இருமல்

6. டி-லிம்போசைட்டில் உள்ள T எழுத்து எதைக் குறிக்கும்? (AIMPT 2009 P)

1. தைமஸ் 2. தைராய்டு 3. தாலமஸ் 4. டான்சில்

7. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் சரியான கூற்றைக் தேர்ந்தெடு (AIPMT 2010)

1. குற்றவாளிகளுக்கு பார்பிட்யூரேட்டுகள் கொடுக்கப்படும்போது அவர்களை உண்மையைச் சொல்ல வைக்கிறது
2. மார்பின் ஒரு வலி நிவாரணி, இது அறுவை சிகிச்சையின் போது பயன்படுத்தப்படுகிறது.
3. புகையிலையை மெல்வதால் இரத்த அழுத்தம், இதயத்துடிப்பு குறைகிறது
4. கோகோயின் அறுவை சிகிச்சை செய்யப்பட்ட நோயாளிகள் விரைவில் குணமடைவதைத் தூண்டுகிறது.

8. மனிதனில் படர் தாமரை எதனால் ஏற்படுகிறது ? (AIPMT 2010)

1. பாக்டீரியா
2. பூஞ்சைகள்
3. உருளை புழுக்கள்
4. வைரஸ்கள்

9. வைடால் சோதனை எந்நோயை கண்டறியப்பயன்படுகிறது ? (AIPMT 2010)

1. மலேரியா 2. நிமோனியா 3. காசநோய் 4. டைபாய்டு

10. சிறுநீரக மாற்று அறுவைசிகிச்சை பற்றிய 4 கூற்றுகளில் எந்த இரண்டு சரியானது? (AIPMT 2010)

a) நீண்ட காலம் நோய்தடுப்பு ஒடுக்கி மருந்துகள் உண்ணவேண்டும்

b) செல்வழிநோய் தடை காப்பு – ஒட்டு நிராகரிப்புக்கு பொறுப்பேற்கிறது

c) B-லிம்போசைட்டுகள் – ஒட்டு நிராகரிப்பு

d) சிறுநீரக மாற்று சிகிச்சை ஏற்றுக் கொள்கிறது – நிராகரிப்பு குறிப்பிட்ட இன்டர்பெரான்களை குறித்து பொறுத்தது

1. (b) மற்றும் (c) 2. (c) மற்றும் (d) 3. (a) மற்றும் (c) 4. (a) மற்றும் (b)

11. டெர்மினிசம் என்பது (AIIMS 1995)

1. படியெடுத்தல்
2. மொழி பெயர்ப்பு
3. மீள் படியெடுத்தல்
4. DNA உருவாக்கம்

12. நிணநீரியத்திசு காணப்படுவது (AIIMS 1994)

1. நிணநீர் முடிச்சுக்கள்
2. தைமஸ் சுரப்பி
3. டான்சிஸ்
4. மேற்கண்ட அனைத்தும்

13. கூற்று : காலராவால் பாதிக்கப்பட்ட நோயாளிக்கு குளுகோஸ், எலக்ட்ரோலைட், மற்றும் நீர் அளிக்கப்படும்

காரணம் : இவை நோயுண்டாக்கும் கிருமிகளை பிளாஸ்மோனலஸ் செய்கிறது

(AIIMS 1994)

1. கூற்று காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கு சரியான விளக்கமாகும்.
2. காரணம், கூற்று இரண்டும சரி, காரணம் கூற்றுக்கு சரியான விளக்கமல்ல.
3. கூற்று சரி, காரணம் தவறு
4. கூற்று காரணம் இரண்டும் தவறு

14. கூற்று : வாய்வழி அளிக்கப்படும், போலியோ சொட்டு மருந்து சிறந்த பயனளிப்பதாக கருதப்படுகிறது.

காரணம் : மீண்டும் ஏற்படும் நோய்த்தொற்றினை தடுக்க சிறுகுடல் சார்ந்த நோய்த் தடைக்காப்பினை ஏற்படுத்துகிறது (AIIMS 1994)

1. கூற்று காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கு சரியான விளக்கமாகும்.
2. காரணம், கூற்று இரண்டும சரி, காரணம் கூற்றுக்கு சரியான விளக்கமல்ல.
3. கூற்று சரி, காரணம் தவறு
4. கூற்று காரணம் இரண்டும் தவறு

15. கூற்று : டைபாய்டு கிருமிகளால் பாதிக்கப்பட்டவரை குணப்படுத்த அவரின் மண்ணீரல் அறுவைசிகிச்சை மூலம் நீக்கப்படுகிறது.

காரணம் : நோயுண்டாக்கும் கிருமிகள் மண்ணீரலில் அதிகமாக காணப்படுவதால்

(AIIMS 1994)

1. கூற்று காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கு சரியான விளக்கமாகும்.
2. காரணம், கூற்று இரண்டும சரி, காரணம் கூற்றுக்கு சரியான விளக்கமல்ல.
3. கூற்று சரி, காரணம் தவறு
4. கூற்று காரணம் இரண்டும் தவறு

16. ரீங்கார பறவை (Humming brids) மற்றும் பருந்து குறிப்பிடுவது (AIPMT 1988)

1. குவி பரிணாமம்
2. அமைப்பொத்தவை
3. தகவமைப்பு பரவல்
4. இணை பரிணாமம்

17. பரிணாமம் என்பது (AIPMT 1989)

1. ஒரு இனத்தின் முற்போக்கான வளர்ச்சி
2. மாறுபாடுகளுடன் கூடிய இனத்தின் வரலாறு மற்றும் வளர்ச்சி
3. இனத்தின் வரலாறு
4. இனத்தின் வளர்ச்சி

18. இனச்செல்களில் ஏற்படும் மாற்றம் கடத்தப்படும் என்ற கோட்பாட்டை கூறியவர்

(AIPMT 1989)

1. டி விரிஸ்
2. வீஸ்மென்
3. டார்வின்
4. லாமார்க்

19. “பெறப்பட்ட பண்புகள் மரபுப் பண்பாதல் ” என்ற கோட்பாட்டை கூறியவர் (AIPMT 1989)

1. வாலேஸ்
2. லாமார்க்
3. டார்வின்
4. டிவிரிஸ்

20. சிற்றினங்களின் தோற்றம் என்ற நூலை எழுதியவர் (AIPMT 1989)

1. ஒபாரின்
2. வீஸ்மேன்
3. லாமார்க்
4. டார்வின்

21. உருளைப்புழுவால் மனிதனுக்கு ஏற்படுவது ? (CBSE PRE 2010)

1. வைரஸ்கள் 2. பாக்டீரியா 3. பூஞ்சைகள் 4. நெமட்டோடுகள்

22. கீழ்க்கண்ட நான்கு கூற்றுகளில் மாற்று சிறுநீரக சிகிச்சை தொடர்பான இரட்டை ஜோடியைத் தேர்ந்தெடுக்க (CBSE PRE 2010)

(a) சிறுநீரக மாற்று அறுவைசிகிச்சை முறையானதாக இருந்தாலும் பெறுநர் நீண்ட காலம் நோய் தடைகாப்பை மட்டுப்படுத்தும் பொருட்களை உட்கொள்ள வேண்டியிருக்கும்.

(b) உறுப்பு நிராகரிப்பிற்கு செல்வழி நோய் தடைகாப்பு துலங்கள் காரணமாகிறது

(c) உறுப்பு நிராகரிப்பிற்கு ட-லிம்போசைட்டுகள் காரணமாகும்.

(d) மாற்று சிகிச்சையை ஏற்றுக்கொள்வது (or) நிராகரிப்பது குறிப்பிட்ட இன்டர்∴பெரான்களை பொறுத்தது.

இரண்டு சரியான கூற்றுகள்.

1. (a) மற்றும் (b) 2. (b) மற்றும் (c)

3. (c) மற்றும் (d) 4. (a) மற்றும் (c)

23. எய்ட்ஸ் தொடர்பான பின்வரும் கூற்றுகளுள் எது சரியானது ? (CBSE PRE 2010)

1. HIV ரெட்ரோவைரஸ் உதவி T-லிம்போசைட்டுக்குள் நுழைந்து அவற்றின் எண்ணிக்கையை குறைக்கிறது.
2. பாதிக்கப்பட்ட நபருடன் சேர்ந்து உணவு உண்பதன்மூலம் HIV பரவுகிறது.
3. போதைக்கு அடிமையானவர்கள் HIV தொற்றுக்கு மிக குறைவாகவே பாதிக்கப்படுகின்றனர்.
4. எய்ட்ஸ் நோயாளிகள் முறையான பராமரிப்பு மற்றும் ஊட்டத்தின் மூலம் சதவீதம் மூலமாக குணமடைந்து வருகிறார்கள்.

24. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றிற்கு சரியான அறிக்கையை தேர்ந்தெடுக்கவும் (CBSE PRE 2010)

1. அறுவை சிகிச்சைக்குப் பிறகு நோயாளிகளுக்கு கோகையின் கொடுக்கப்படுகிறது. ஏனெனில் அது மீட்கப்படுவதை தூண்டுகிறது.
2. குற்றவாளிகளுக்கு பார்பியூரேட்டுகள் கொடுக்கப்படும் போது அவர்களை உண்மையை சொல்ல வைக்கிறது.
3. வலி நிவாரணியாக அறுவை சிகிச்சை செய்தவர்களுக்கு மார்பின் அடிக்கடி கொடுக்கப்படுகிறது.
4. மெல்லும் புகையிலை இரத்த அழுத்தம் மற்றும் இதயத் துடிப்பைக் குறைக்கிறது.

25. கீழ்கண்டவற்றில் பொருந்தாத இணையை கண்டறிக. (AIIMS 2008)

1. ஸ்ரெப்டோமைசிஸ் - உயிர் எதிர்பொருள்
2. சிரேட்டியா - போதை பழக்கம்
3. ஸ்பைருலினா - ஒற்றை செல்புரதம்
4. ரைசோபியம் - உயிரி உரம்.

26. புகைப்பிடித்தல் உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடியது. ஏனெனில் புகையிலையில் பாலிசைக்கிள் அரோமேட்டிக் ஹைட்ரோகார்பன் உள்ளது. இதனால் உடல் நலத்திற்கு ஏற்படும் விளைவு (AIIMS 2008)

1. ஆக்ஸிஜன் வாயு கடத்தலை குறைக்கின்றது
2. இரத்த அழுத்தம் அதிகரித்தல்
3. புற்றுநோய் உருவாதல்
4. கருவளர்ச்சி குறைபாடுகள்.

27. பாக்டிரிய நோய்களை உயிர் எதிர்ப் பொருள்களால் சரி செய்ய முடிவதில்லை ஏன் ? (AIIMS 2008)

1. நோய் காரணிக்கு எதிரான எதிர் பொருளின் நீடித்த திறன்
2. பாக்டீரிய நொதிக்கு எதிரான உயிர் எதிர்ப் பொருட்களின் போதிய செயல்திறன் இன்மை
3. நோய் தடைகாப்பு மண்டலத்தின் செயல்திறனைக் குறைக்கிறது
4. இது உயிர் எதிர் பொருளுக்கு எதிராக தடைக்காப்பு மண்டலத்தில் மரபணு மாற்றம் அடைந்த ஆன்டிஜனாக உருமாற்றம் அடைகிறது.

28. கீழ்கண்டவற்றுள் பாக்டீரிய நோய் தொகுதி எது? (AIIMS 2008)

1. காலரா, டைபாயிடு, புட்டாளம்மை
2. டெட்டனஸ், காசநோய், அம்மை
3. மலேரியா, புட்டாளம்மை, போலியோ மைலிட்டிஸ்
4. டிப்தீரியா, தொழுநோய், ப்ளேக்.

29. ஆண்டிஜன், ஆன்டிபாடி வினையின் போது உருவாகும் கரையாத திரட்சி உடைய கூட்டுப் பொருள் உருவாகும் நிகழ்ச்சி (AIIMS 2008)

1. ஆன்டிபாடி, ஆண்டிஜன் கூட்டமைவு
2. அக்ளுட்டினேசன் (திரட்சி அடைதல்)
3. நோய் தடுப்பாக்கம்
4. செல் வேதி செயல்பாட்டை ஒடுக்குதல்

30. கூற்று : வெறிநாய்கடி என்பது வெப்ப இரத்தப் பாலூட்டிகளில் ஏற்படும் குறுகிய கால நோய் ஆகும். இது மத்திய நரம்பு மண்டலத்தை தாக்கி, பக்கவாதம் மற்றும் இறப்பை ஏற்படுத்துகிறது.

காரணம் : இந்நோயானது பாதிப்படைந்த உயிரினத்தின் உமிழ்நீர் வழியாக நரம்பு மண்டலத்தை தாக்ககூடிய பாக்டீரியல் நோயாகும். (AIIMS 2008)

1. காரணமும் கூற்றும் உண்மையானால் காரணம் கூற்றிற்கு சரியான விளக்கமாகும்
2. காரணமும் கூற்றும் சரியானால் காரணம் கூற்றிற்கு சரியான விளக்கமல்ல
3. கூற்று சரி, காரணம் தவறு
4. காரணம் மற்றும் கூற்று இரண்டுமே தவறானது

31. பொருந்தாத இணையை கண்டறியவும் (NEET 2021)

1. ஆல்கலாய்டுகள் – கோட்ரின்
2. டாக்ஸின் – அப்ரின்
3. லெக்டின்கள் – கான்கனாவலின் A
4. மருந்துகள் – ரிசின்

32. நாள்பட்ட சுய தடைகாப்பு குடைபாடானது நரம்பு தசைநார் சந்திப்பில் பாதிப்பை ஏற்படுத்தி தரை பிடிப்பு, பக்கவாதம் எலும்பு தசை போன்றவற்றில் ஏற்படுத்தும் நோய் கீழ்கண்டவற்றுள் எது ? (NEET 2021)

1. ஆர்க்தரைட்டிஸ்
2. தசைநார் தேய்வு
3. மையஸ் தீனியா கிரேவிஸ்
4. கௌட்

33. நோயினை ஆரம்ப நிலையில் கண்டறிந்து சிகிச்சை அளித்தல் அவசியம். கீழ்கண்ட எந்த நோய் கண்டறிதல் நுட்பம் நோய் ஆரம்பநிலையல் நோய் மூலக்கூறுகளை கண்டறிய உதவுகிறது. (NEET 2021)

1. வெஸ்ட்டர்ன் பிளாட் தொழில்நுட்பம்
2. சதரன் பிளாட்டிங் தொழில்நுட்பம்
3. எலைசா தொழில்நுட்பம்
4. கலப்பினமாக்கம் தொழில்நுட்பம்

34. பொருத்துக.

| தொகுதி -I | | தொகுதி -II | |
|---|---|---|---|
| a) | பைலேரியாசிஸ் | 1. | ஹீமோபிலஸ் இன்புளுயன்சா |
| b) | அமீபியாசிஸ் | 2. | ட்ரைக்கோபைட்டான |
| c) | நிமோனியா | 3. | உச்சரீயா பான்கிராப்டி |
| d) | படர்தாமரை | 4. | எண்டமீபா ஹிஸ்டோலைடிகா |

சரியான விடையைத் தேர்வு செய்க.

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| 1 | (iv) | (i) | (iii) | (ii) |
| 2. | (iii) | (iv) | (i) | (ii) |
| 3. | (i) | (ii) | (iv) | (iii) |
| 4. | (ii) | (iii) | (i) | (iv) |

35. கூற்று(கூ) : எதிர்ப்பொருள் தூண்டியை சுலபமாக கண்டறிய முடியும் ஏனென்றால் இதில் எதிர்ப்பொருள் நிச்சயக் குறிகள் உண்டு

காரணம்(கா) : அடையாளம் காணும் திறன் பிறப்பிலிருந்தே உள்ளது

(AIIMS 2007)

1. காரணமும் கூற்றும் உண்மை ஆனால் காரணம் கூற்றிற்கு சரியான விளக்கமாகும்
2. காரணமும் கூற்றும் சரி ஆனால் காரணம் கூற்றிற்கு சரியான விளக்கமல்ல
3. கூற்று சரி ஆனால் காரணம் தவறு
4. காரணம் மற்றும் கூற்று இரண்டுமே தவறானது.

36. விலங்கு செல் வளர்ப்பு தொழில் நுட்பத்தில் எது அதிகளவு உற்பத்தி செய்யப்படுகிறது ?

(AIPMT 2003 OS)

1. இன்சுலின் 2. இன்டர்பெரான்
3. தடுப்பூசிகள் 4. சாப்பிடதக்க புரதம

37. கார்சினோமா என்பது. (AIPMT 2003 OS)

1. இணைப்பு திசுவில் ஏற்படும் மாலிக்னன்ட் புற்று
2. தோல் அல்லது மியுக்கஸில் ஏற்படும் மாலிக்னைட் புற்று
3. குடலில் ஏற்படும் மாலிக்னன்ட் புற்று
4. இணைப்பு திசுவில் ஏற்படும் தீங்கற்ற புற்றுநோய்

38. தாய் சேய் இணைப்பு திசு மூலம் கருவுக்கு அல்லது பிறந்த குழந்தைக்கு தாய்பால் மூலம் கிடைக்கும் குறைந்த கால நோய் எதிர்ப்பின் வகை. (AIPMT 2003)

1. செயலாக்க நோய்தடை காப்பு
2. மந்தமான நோய்தடைகாப்பு
3. செல்லுலார் நோய்தடைகாப்பு
4. இயல்பான குறிப்பற்ற நோய்தடைகாப்பு

39. பாலூட்டியின் T லிம்போசைட் பற்றிய உண்மை கருத்து எது ? (AIPMT 2003 OS)

1. மூன்று வகைகள் செல் நச்சாக்க Tசெல்கள்
2. நிணநீர் திசுக்களில் இருந்து தோன்றுகிறது.
3. செல் துணுக்குகளையும் பாதிப்படைந்த செல்களையும் உண்ணுகிறது.
4. தைராய்டு உற்பத்தி செய்கிறது

40. வைரஸை கண்டுபிடிக்க உதவும் எலைசா சோதனையில் பயன்படும் மிக முக்கிய ஆய்வக காரணி (AIPMT 2003)

1. அல்கலைன் பாஸ்படேஸ் 2. கேட்டலேஸ்
3. DNA ஆய்வு 4. RN யேஸ்

41. புற்றுநோய் செல்கள் சாதாரண செல்களை விட கதிர்வீச்சினால் எளிதில் சேதம் அடைகிறது ஏனெனில் (AIPMT 2004)

1. அபரிமிதமான செல்பிரிதல்
2. அமைப்பில் வேறுபட்டது
3. பிரியாதது
4. பட்டினி சடுதி மாற்றம்

42. பின்வருவனவற்றுள் எது சரியான பொருத்தமல்ல (AIPMT 2004)

1. கியூலெக்ஸ் பைபியன்ஸ் – யானைக்கால் வியாதி
2. ஏடெஸ் எஜிப்டி – மஞ்சள் காய்ச்சல்
3. அனாபிலஸ் குலி.்.பாசியன்ஸ் – லீஸ்மேனியாசிஸ்
4. குளோசினா பல்பாலிஸ் – தூங்கும் நோய்

43. கீழ்க்கண்ட இணைகளில் எது வைரஸால் ஏற்படும் நோய்கள்? (CBSE PM/PD 2009)

1. சளி, எய்ட்ஸ் (AIDS)
2. வயிற்றுக் கருப்பு, சளி
3. டைபாய்டு, எலும்புருக்கி நோய் (TB)
4. உருளைப்புழு, எய்ட்ஸ் (AIDS)

44. கணிக்க முடியாத மனநிலையைக் காட்டும் நபர், உணர்ச்சிகளின் வெளிப்பாடு, சண்டை போடும் தன்மை, மற்றவருடன் ஒத்துப் போகாத தன்மையுடையோர் பாதிக்கப்பட்டிருப்பது (AIIMS - 2006)

1. எல்லைக்குட்பட்ட ஆளுமைக் கோளாறு (BPD)
2. மனநிலைக் கோளாறு
3. அடிமையாக்கும் கோளாறு
4. ஸ்கிசோ.்.ப்ரினியா

45. குழந்தைகள் அழுக்குக் குளங்களில் வெறும் காலுடன் விளையாடும் போது அவர்களுக்கு ஏற்படும் நோய்கள் (AIIMS - 2006)

1. லெப்டோஸ்பிரோசிஸ் மற்றும் பில்ஹார்சியா
2. மலேரியா, அமீபிக் சீதபேதி மற்றும் லெப்டோஸ்பிரோசிஸ்
3. பில்ஹார்சியா, தொற்று ஹெபடிடிஸ், வயிற்றுப் போக்கு
4. கினியா புழு தொற்று, யானைக்கால் வியாதி, அமீபிக் சீதபேதி

46. கூற்று : வெட்டுக்காரணமாக மற்றும் இரத்தப் போக்கு கொண்ட ஒருவருக்கு டெட்டனஸ் எதிர்ப்பு சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்.

காரணம் : டெட்டனஸ் எதிர்ப்பு ஊசி டெட்டனசுக்கான ஆண்டி பாடிகளை உருவாக்குவதன் மூலம் நோய் எதிர்ப்பு சகக்தியை வழங்குகிறது. (AIIMS - 2006)

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் உண்மை மற்றும் காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது.
2. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.
3. கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
4. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

47. கூற்று : புற்றுநோய் செல்கள் அவை வசிக்கும் உடல் இறக்கும் வரை அழியாதது.

காரணம் : செல் பிரிவு சுழற்சியை ஒழுங்குபடுத்தும் மரபணுக்கள் சேதமடைவதால் புற்றுநோய் ஏற்படுகிறது. (AIIMS - 2006)

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் உண்மை மற்றும் காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது.
2. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.
3. கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
4. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

48. கூற்று : E.கோலை, ஷிஜெல்லா, சால்மோனெல்லா சிற்றினம் அனைத்தும் வயிற்றுப்போக்கிற்கான நோய்.

காரணம் : அனைத்து வகையான வயிற்றுப்போக்கு நோய்களுக்கும் நீரிழிவு பொதுவானது மற்றும் போதுமான திரவ எலக்ட்ரோலைட்டுகள் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் (AIIMS - 2006)

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் உண்மை மற்றும் காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது.
2. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.
3. கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
4. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

49. ஓரின உயிர் எதிர்பொருள் பற்றிய உண்மையான கூற்று எது ? (AIPMT – 2001)

1. இந்த எதிர்பொருள் ஒரு பெற்றோரிடமிருந்து ஒரு எதிர்பொருள் தூண்டியினால் பெறப்படுகிறது.
2. இது வேறுபட்ட பெற்றோரிடமிருந்து ஒரு எதிர்பொருள் தூண்டிக்காக பெறப்படுகிறது.
3. இது ஒரு பெற்றோர் மற்றும் பல எதிர்பொருள் தூண்டியினால் பெறப்படுகிறது.
4. இது பல பெற்றோர் மற்றும் பல எதிர்பொருள் தூண்டியினால் பெறப்படுகிறது.

50. எந்த மீன் இனம் கொசுவின் இளம் உயிரியை தேர்ந்தெடுத்து உண்ணுகிறது ? (AIPMT – 2001)

1. கம்பூசியா 2. ரோகு 3. கிளாரியஸ் 4. எக்ஸோகாய்டஸ்

51. L.S.D என்பது ? (AIPMT – 2001)

1. பகற்கனவை தூண்டுபவை 2. தூக்கத்தை ஏற்படுத்துபவை
3. தூண்டுபவை 4. அமைதியூட்டுபவை

52. சால்மோனெல்லா இதனுடன் தொடர்புடையது ? (AIPMT – 2001)

1. டைபாய்டு 2. போலியோ 3. T.B 4. டெட்டனஸ்

53. பின்வருவனவற்றுள் எது அதிக நோய் தொற்றும் திறன் பெற்றது ? (AIPMT – 2001)

1. ஹெப்பாட்டிடிஸ் – B
2. எய்ட்ஸ்
3. இருமல் மற்றும் சளி
4. மலேரியா

54. ஹுயூகோ டி விரீஸ் கருத்துப் படி பரிணாமத்தின் செயல்முறை யாவது ? (NEET – 2018)

1. சால்டேஷன்கள்
2. புறதோற்ற மாறுபாடுகள்
3. பல படிநிலை திடீர்மாற்றங்கள்
4. சிறியளவு திடீர்மாற்றங்கள்,

55. விரி பரிணாமத்திற்கு கொடுக்கப்பட்ட எடுத்துக்காட்டுகளில் தவறானது எது ? (NEET – 2018)

1. வௌவால், மனிதன் மற்றும் சீட்டாவின் இதயம்
2. வௌவால், மனிதன் மற்றும் சீட்டாவின் மூளை
3. மனிதன், வௌவால் மற்றும் சீட்டாவின் முன்னங்கால்
4. ஆக்டோபஸ், வௌவால் மற்றும் மனிதனின் கண்.

56. முதுகெலும்பிகளின் முன்னங்கால்களின் எலும்பமைப்பில் உள்ள ஒற்றுமை எதற்கு எடுத்துக்காட்டு ? (NEET – 2018)

1. அனாலஜி
2. குவிநிலை பரிணாமம்
3. ஹோமாலஜி
4. தழுவி பரவல்.

57. கீழ்காண்பவற்றில் மனிதனின் எந்த உறுப்பு சிவப்பணுக்களின் அழிவிற்கான இடம் என அழைக்கப்படுகிறது ? (AIIMS 2015)

1. பித்தப்பை 2.சிறுநீரகம் 3.மண்ணீரல் 4.கல்லீரல்

58. S.L.மில்லர் தன் சோதனைகளில் மூடிய குடுவையில் இருந்து எவற்றைக் கலப்பதின் மூலம் அமினோ அமிலங்களைத் தோற்றுவித்தார்? (NEET 2020)

1. $CH_4$, $H_2$, $NH_3$ மற்றும் நீராவி
2. $CH_3$, $H_2$, $NH_4$ மற்றும் நீராவி
3. $CH_4$, $H_2$, $NH_3$ மற்றும் நீராவி
4. $CH_3$, $H_2$, $NH_3$ மற்றும் நீராவி

59. பென்குவின் மற்றும் டால்ஃபினின், ஃபிளிப்பர்கள் இதற்கு எடுத்துக்காட்டு : (NEET 2020)

1. தழுவிப் பரவல்
2. குவி பரிணாமம்
3. தொழிற்சாலை மெலானின் ஆக்கம்
4. இயற்கைத் தேர்வு

60. மனிதர்கள் செயல்பாட்டால் ஏற்பட்ட மாற்றங்கள் கீழ்க்கண்ட எவற்றில் பரிணாமமடைந்தன ?

(a) காலபகோஸ் தீவில் உள்ள டார்வின் சிட்டுக் குருவிகள் (NEET 2020)

(b) களைச் செடிகளில் களைகொல்லி எதிர்ப்பு

(c) யூகேரியோட்டுகளில் மருந்துப் பொருளுக்கு எதிர்ப்பு

(d) மனிதன் உருவாக்கிய நாய்கள் போன்ற வீட்டு விலங்கின வகைகள்

1. (a) மட்டும்
2. (a) மற்றும் (c)
3. (b) (c) மற்றும் (d)
4. (d) மட்டும்

61. பரிணாமம் குறித்த கருவியல் சான்றினை தவறென நிரூபித்தவர் : (NEET 2020)

1. கார்ல் எர்ன்ஸ்ட் வான் பேர்
2. ஆல்பிரட் வாலஸ்
3. சார்லஸ் டார்வின்
4. ஒபாரின்

62. கொடுக்கப்பட்டுள்ள ஹோமினிட்களை அதன் சரியான மூளை அளவுடன் பொருத்துக. (NEET 2019)

| | |
|---|---|
| a) ஹோமோ ஹாபிலிஸ் | i) 900cc |
| b) ஹோமோ நீயாண்டர்தாலென்சிஸ் | ii) 1350cc |
| c) ஹோமோ ஏரக்டஸ் | iii) 650-800cc |
| d) ஹோமோசாபியன்ஸ்I | v) 1400cc |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| 1. | (iv) | (iii) | (i) | (ii) |
| 2. | (iii) | (i) | (iv) | (ii) |
| 3. | (iii) | (ii) | (i) | (iv) |
| 4. | (iii) | (iv) | (i) | (ii) |

63. ஒரு சிற்றினத்தில் புதிதாக பிறந்த பச்சிளம் உயிரியின் எடை 2-5 kg ஆகும். சராசரி எடை 3-3.3 kg உள்ள பச்சிளம் உயிரிகளில் 97% மட்டும் தான் உயிர் வாழ்கிறது. 2-2.5 kg அல்லது 4.5 -5 kg எடையுள்ள பச்சிளம் உயிரிகளில் 99% இறந்து விடுகிறது. இதில் எவ்வகை தேர்வு முறை நடைபெறுகிறது ? (NEET 2019)

1. சுழற்சி தேர்வு
2. திசை தேர்வு
3. நிலைப்படுத்தும் தேர்வு
4. சிதைவுறும்தேர்வு

64. கூற்று : LSD மற்றும் மர்ஜீவானா ஆகியவை மருத்துவ ரீதியாக வலிநிவாரணியாக பயன்படுத்தப்படுகின்றன

காரணம் : இந்த இரண்டு மருந்துகளும் மூளையின் செயல்பாட்டை மட்டுப்படுத்துகின்றன

(AIIMS - 2006)

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் உண்மை மற்றும் காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது.
2. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.
3. கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
4. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

65. மலேரிய ஒட்டுண்ணியின் ஸ்போரோசோயிட் நிலை காணப்படும் இடம்

(AIPMT PRELIMINARY 2011)

1. புதிய அனாபிலஸ் பெண் கொசுவின் உமிழ்நீர் சுரப்பிகள்
2. நோய்த் தொற்று ஏற்ப்பட்ட பெண் அனாபிலஸ் கொசுவின் உமிழ் நீர்
3. மலேரியாவால் பாதிக்கப்பட்ட மனிதனின் இரத்த சிவப்பணுக்கள்
4. பாதிக்கப்பட்ட மனிதனின் மண்ணீரல்

66. AIDS நோயால் பாதிக்கப்பட்டவரின் நோய்த்தன்மையை கண்டறிய உதவும் முறை ?

(AIPMT PRELIMINARY 2011)

1. பைடால் சோதனை
2. எலைசா
3. காந்த அதிர்வு அலை வரைவு
4. மீயொலி பரிசோதனை

67. கடுமையான இருமல், தொண்டையின் பாதையை நிறுத்தி, கோழை படல அடுக்கை உருவாக்கும் நோய் ? (AIIMS 1997)

1. டியூபர்குளோஸிஸ்
2. டெட்டானஸ்
3. டிப்த்தீரியா
4. பெர்ட்ஸிஸ்

68. அபாய நோயை ஏற்படுத்தும் எந்த வகை லாவாக்களை கட்டுப்படுத்த கொன்றுண்ணம் வகை கம்பூசியா மீன் ஏரிகள், மற்றும் குளங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது ?

(AIIMS 1997)

1. தட்டான் பூச்சி
2. நெப்பத்தஸ்
3. அனோபீலஸ்
4. இவை அனைத்தும

69. சரியான இணையை தேர்ந்தெடு நோய், நோய்காரணி தோன்றும் தன்மை அடிப்படையில் (AIPMT MAIN 2011)

| | நோய் | நோய்காரணி | நோய் தொற்றும் தன்மை |
|---|---|---|---|
| 1. | மலேரியா | பிளாஸ்மோடியம் வைவாக்ஸ் | ஆண் அனாபிலஸ் கொசு கடித்தல் |
| 2. | டைபாய்டு | சால்மானெல்லா டைபி | அசுத்த காற்று சுவாசிப்பதால் |
| 3. | நிமோனியா | ஸ்ட்ரெப்டோ காக்கஸ் நிமோனியே | நீர்த்துளி தொற்று மூலம் |
| 4. | யானைக்கால் | உச்சரீரியா பான்கிரா∴ப்பி | அசுத்த நீர் மற்றம் உணவு மூலம் |

70. மனிதனில் படர் தாமரையை உருவாக்கும் மைக்ரோஸ்போரம் உயிரினம் கீழ்க்கண்ட விலங்குலகத்தை சார்ந்தது ? (AIPMT MAIN 2011)

1. அஸ்காரிஸ் - உருளை புழுக்கள்
2. நாடாப்புழு - தட்டை புழுக்கள்
3. உச்சரீரியா - யானைக்கால் புழுக்கள்
4. ரைசோபஸ் - பூஞ்சை

71. பேசிலஸ் துரிஞ்சியென்சிஸ் புரத படிகங்க்ளை உருவாக்குகிறது அதில் பூச்சி கொல்லி தன்மை எதிர்ப்பு புரதம் உள்ளது. இந்த புரதம் (AIPMT MAIN 2011)

1. நச்சுத் தன்மை எதிர்க்கும் தாங்கி பாக்டீரியாவை கொல்லாது
2. பூச்சியின் நடுக்குடலில் எபிதீலிய செல்களை தாக்கி அதனை அழிக்கும்
3. இதில் CRY மரபணு உள்ளது.
4. இது பூச்சியின் முன் குடலில் உள்ள அமில pH ஆல் செயல்படுகிறது.

72. மலேரியாவை உண்டாக்கும் பிளாஸ்மோடிய ஒட்டுண்ணி இந்த வகுப்பைச் சார்ந்தது ? (AIPMT 1990)

1. சார்கோடினா
2. சிலியேட்டா
3. ஸ்போரோசோவா
4. டைனோபைசியே

73. டிரிப்னோசோமா பற்றிய சரியான கூற்று (AIPMT 1990)

1. பல்லுருதன்மை
2. ஒற்றை மரபுத்தன்மை
3. நிலைமாறா ஒட்டுண்ணி
4. நோயை உண்டுபண்ணாதவை

74. தோலுரித்தலில் இது நீக்கப்படுகிறது ? (AIPMT 1990)

1. ஸ்ட்ரேடம் கார்னியம்
2. எபிடெர்மிஸ்
3. டெர்மிஸ்
4. ஸ்ட்ரேட்டம் மால்பீஜி

75. மால்பீஜியன் குழல்கள் என்பவை (AIPMT 1990)

1. பூச்சிகளின் கழிவு நீக்க உறுப்பு
2. வளைதளை புழுக்களின் கழிவு நீக்க உறுப்பு
3. பூச்சிகளின் சுவாச உறுப்பு
4. வளைதளை புழுக்களின் சுவாச உறுப்பு

76. மலேரியா ஒட்டுண்ணி பிளாஸ்மோடியம் எந்நிலையில் மனிதனில் நோயை உண்டுபண்ணுகிறது ? (AIPMT 1990)

1. மீரோசோயிட்டுகள்
2. ஸ்போரோசோயிட்டுகள்
3. டிரோபோசோயிட்டுகள்
4. மினூட்டா நிலை

77. வலிநிவாரண மருந்துகள் (AIPMT 1990)

1. திசுவை உருவாக்குகிறது
2. வலியை நீக்குகிறது
3. தசைப்பிடிப்பை விடுவிக்கிறது
4. வலியை ஏற்படுத்துகிறது

78. ஆப்ரிக்க தூக்க வியாதி எதனால் ஏற்படுகிறது? (AIPMT 1991)

1. செட்சி – செட்சி ஈக்கள் மூலம் பிளாஸ்மோடியம் வைவாக்ஸ் பரவுதல்
2. மூட்டைபூச்சி மூலம் ட்டிரிபனோசோமா லூசி பரவுதல்
3. குளோசினியா பல்பாலிஸ் மூலம் டிரிபனோசோமா கேம்பியன்ஸ் பரவுதல்
4. வீட்டு ஈக்கள் மூலம் எண்டமீபா சிஜ்ஜிவாலிஸ் பரவுதல்

79. மாலிக்னட் டெர்ஷியன் மலேரியா ஒட்டுண்ணி எந்த வகுப்பைச் சார்ந்தது ? (AIPMT 1991)

1. பிளாஸ்மோடியம் பால்சிபாரம்
2. பிளாஸ்மோடியம் வைவாக்ஸ்
3. பிளாஸ்மோடியம் ஓவேல்
4. பிளாஸ்மோடியம் மலேரியே

80. மனித இரத்த சிவப்பு அணுவில் முதன்முதலில் பிளாஸ்மோடியம் இருப்பதை கண்டறிந்தவர் யார் ? (AIPMT 1991)

1. ரொனால்டு ராஸ்
2. மெண்டல்
3. லாவெரன்
4. ஸ்டீபன்ஸ்

81. கூற்று : தாவரங்களின் இரண்டாம் நிலை வளர்சிதை மாற்றப் பொருள்கள் மனிதனுக்கு பயனுள்ளவை (AIIMS 27.05.2018 AN)

காரணம் : அபிரின் மற்றும் ரிசின் நச்சுத் தன்மையுடையவை

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி மற்றும் காரணம் கூற்றிற்கு சரியான விளக்கமாகும்
2. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றிற்கு சரியான விளக்கமல்ல.
3. கூற்று சரி ஆனால் காரணம் தவறு
4. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

82. கீழ்காணும் உயிரிகள் மனிதனில் எந்த நோய் நிலையைக் குறிக்கிறது மற்றும் அந்த நோயிற்க்கு காரணமான புழுவின் பெயரிடு. (AIIMS 2017)

1. எப்பிடெர்மோபைட்டான் பிளாக்கோசம் 2. அஸ்காரிஸ் லூம்ப்பிரகாய்டஸ்
3. உச்சரீரயா பான்கிராப்டி 4. எண்டமீபா ஹிஸ்டாலிட்டிக்கா

83. கீழ்கண்ட படத்திற்கு பொருந்தாத உயிரினம் எது ? (AIIMS 2017)



1. மைக்ரோஸ்போரம் 2. டிரைக்கோ.ஃ.பைட்டான்
3. W. மலாயி 4. எபிடெர்மோ.ஃ.பைட்டான்

84. பின்வரும் எந்த இணை நோய்கள் வைரஸில் உருவாகின்றன ? (AIPMT 1996)

1. ரேபிஸ், புட்டாளம்மை 2. காலாரா, டியூபர்குலோசிஸ்
3. டை.ஃ.பாய்டு, டெட்டனஸ் 4. எயிட்ஸ், சி.ஃ.பிலிஸ

85. எதிர்ப் பொருட்களை உற்பத்தி செய்வது (AIPMT 1996)

1. லியூக்கோசைட்டுகள் 2. மோனோசைட்டுகள்
3. லிம்போசைட்டுகள்4. மண்ணீரல்

86. இண்டர்பெர்ரான் என்பது (AIPMT 1996)

1. ஆண்டிஜன் புரதம் 2. வைரஸ் எதிர்ப்பு புரதம்
3. எதிர் உயிரி புரதம் 4. இவையணைத்தும்

87. பின்வருவனவற்றில் எது உயிர் எதிர்ப்புப் பொருள் பற்றிய தவறான கூற்று ? (AIPMT 1996)

1. சிலர் எதிர் உயிரியிலிருந்து ஒவ்வாமையை பெறுகின்றனர்
2. எதிர் உயிரிகள் எந்த விதமான நோயையும் ஏற்படுத்தும் திறனுடையவை
3. இந்த வார்த்தை வாக்ஸ்மெனால் 1942 ல் தரப்பட்டது
4. எதிர் உயிரிகள் நுண்ணுயிரிகளால் உற்பத்தி செய்யப்படுகின்றன

88. டிப்தீரியாவை உருவாக்கும் காரணி ? (AIPMT 1997)

1. நெமட்டோடுகள் 2. பாக்டீரியா 3. வைரஸ் 4. ஏதுமில்லை

89. இந்தியாவிலிருந்து முற்றிலுமாக ஒழிக்கப்பட்ட நோய் எது ? (AIPMT 1997)

1. பெரியம்மை 2. போலியோ மைலிடிஸ்
3. பிளேக் 4. கால அசார்

90. மனித உடலில் இன்டர்பெரான் உற்பத்தி எந்த நோய் தொற்றுதலை வெளிப்படுத்துகிறது? (AIPMT 1997)

1. டெட்டானஸ் 2. மலேரியா 3. டைஃபாய்டு 4. மீசல்ஸ் (தட்டம்மை)

91. இவற்றுள் எது ஒபியேட் நார்கோடிக் மருந்தாகும் (AIPMT 1997)

1. ஆம்பெடமைன்கள் 2. LSD
3. பார்பிட்யூட்ஸ் 4. மார்பின்

92. சினோப்ஸில்லா எர்சினியா பெஸ்டிஸ் உடன் தொடர்புடையது போல கீழ்க்கண்டவற்றில் தொடர்புடையது எது?

(AIIMS 2003)

1. கிளாசினா பால்பாலிஸ் முதல் உச்சரேரியா பான்கிராப்டிவரை
2. கியூலக்ஸ் முதல் பிளாஸ்மோடியம் பால்சிபேரம் வரை
3. ஹோமோசெபியன்ஸ் முதல் டீனியாசோலியம் வரை
4. பிளிப்போடாமஸ் முதல் லீஸ்மேனியா டோனவானி வரை

93. கூற்று : மனித உடலில் காணப்படக்கூடிய மாஸ்ட் செல்கள் அதிகமான வீக்கத்திற்கான வேதிய சமிக்ஞைகள் உண்டாக்குவதால் ஒவ்வாமை ஏற்படுகிறது.

காரணம் : சில மனிதர்களுக்கு சுற்றுபுறத்தில் உள்ள ஒவ்வாமை தூண்டிகளால் மாஸ்ட் செல்கள் தூண்டப்படுகிறது. (AIIMS 2003)

1. கூற்று மற்றும் காரணம் சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்.
2. கூற்று காரணம் 2ம் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.
3. கூற்று சரி ஆனால் காரணம் தவறு

4. கூற்று காரணம் இரண்டும் தவறு

94. கூற்று : அதி தீவிரமான சுவாச குறைபாடு (SARS) சீனாவில் தோன்றியது.
காரணம் : உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட நாடு சீனா ஆகும்.
(AIIMS 2003)

1. கூற்று மற்றும் காரணம் சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்.
2. கூற்று காரணம் 2ம் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமில்லை.
3. கூற்று சரி ஆனால் காரணம் தவறு
4. கூற்று காரணம் இரண்டும் தவறு

95. கோழி காலராவிற்கு எதிரான பலவீனமான நுண்ணுயிரிகளைக் கொண்ட முதல் தடுப்பூசி 1880 இல் உருவாக்கியவர். (AIIMS 2002)

1. கிறிஸ்டியன் பர்னியான்
2. ஜோஸ் லிஸ்டட்
3. ராபார்ஸ் லூச்
4. லூயிஸ் பாஸ்டியர்

96. கூற்று : B செல்கள் ஆண்டிபாடி நோய் எதிர்ப்பு சக்திக்கு பொறுப்பு. இது ஒரு ஆண்டிஜனை நேரடியாக அடையாளம் கண்டு ஆன்டிபாடி சுரக்கும் பிளாஸ்மா செல்கள் மற்றும் நினைவாக B செல்களை உருவாக்குகிறது.
காரணம்: நீண்ட காலம் சுறுசுறுப்பாக செயல்படும் காலத்திற்கு தடுப்பூசிகளைப் பயன்படுத்துவதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தியைத் தூண்டலாம்.
(AIIMS 2002)

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது.
2. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.
3. கூற்று சரி காரணம் தவறு
4. கூற்று தவறு, காரணம் சரி.

97. கூற்று : டையபீடிசிஸ் மூலம் காயங்களில் வெள்ளை அணுக்கள் குவிகின்றன.
காரணம் : இது எண்டோதீலியத் திசுவிலிருந்து லியூக்கோசைட்டுகள் கசிவதால் ஏற்படுகிறது.
(AIIMS 2002)

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது.
2. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.
3. கூற்று சரி காரணம் தவறு
4. கூற்று தவறு காரணம் சரி

98. கூற்று : ஹிஸ்டமைன் ஒவ்வாமை மற்றும் வீக்க வினைகளில் பங்கேற்கின்றன
காரணம் : ஹிஸ்டாமைன் ஒரு வாசோடைலேட்டர். (AIIMS 2002)

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது.
2. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.

3. கூற்று சரி காரணம் தவறு

4. கூற்று தவறு காரணம் சரி

99. கீழே கொடுக்கப்பட்டுள்ள பூக்கும் வகை தாவரத்தில் ஒரு வகையான மருந்து பெறப்படுகிறது அவை (AIPMT 2014)



1. மனமருட்சி
2. மன அழுத்த ஊக்கிகள்
3. கிளர்வூட்டிகள்
4. வலி-நிவாரணி

100. HIV வைரஸ் தொற்றின் எந்த நிலையில் AIDS ன் அறிகுறிகள் காணப்படும் (AIPMT 2014)

1. தொற்றுடைய மனிதருடன் பாலுறவு கொண்ட 15 நாட்களுக்குள்
2. தொற்றுடைய ரெட்ரோவைரஸ், விருந்தம்பியின் செல்லுக்குள் நுழையும் பொழுது
3. HIV அதிக எண்ணிக்கையிலான உதவி T லிம்போசைட்டுகளை அழிக்கும் பொழுது
4. ரிவர்ஸ் டிரான்கிரிப்டேஸ் வைரஸின் DNA வை உருவாக்கும் பொழுது

101. பின்வரும் நோய்களில் புரோட்டோசோவால் ஏற்படுகிறது (AIPMT 2015)

1. இன்.ஃ.ப்ளுயன்ஸா
2. பேபிசியோசிஸ்
3. பிளாஸ்டோமைகோசிஸ்
4. சிபிலிஸ்

102. உயரிய நைட்ரஜன் நிலைநிறுத்தத்தின் போது ஆக்ஸிஜன் நச்சாவதால் நைட்ரோஜனேஸ் செயலிழப்பதை எதன் மூலம் தடுக்கலாம் (AIPMT 2015)

1. சாந்தோபில்
2. கரோட்டின்
3. சைட்டோகுரோம்
4. லெக்ஹீமோகுளோபின்

103. கீழ்க்கண்ட கூற்றுகளில் எது சரியானது (AIIMS 2011)

1. சாதாரண சளி – நீர்த்துளி தொற்று
2. டைபாய்டு – அசுத்தமான நீர் மற்றும் உணவு
3. AIDS – கை குழுக்குதல்
4. வளைபுழு நோய் – நோய்தொற்று உள்ள துணிகளை பயன்படுத்துதல்

1. 1 மற்றும் 2  2. 3 மற்றும் 4  3. 1 மற்றும் 3  4. 1, 2, மற்றும் 4

104. கூற்று : புதியதாக உருவான பெண் அனாபிலஸ் கொசு கடிக்கும் போது மனித உடலுக்குள் மலேரியா ஒட்டுண்ணியின் ஸ்போரோசோய்ட் நுழைகிறது, அதன் தாய் மலேரியா ஒட்டுண்ணியின் கடத்தியாக உள்ளது.

காரணம்: மனிதனின் குடலில் மலேரியா ஒட்டுண்ணியின் ஆண் மற்றும் பெண் கேமிட்டோசைட்கள் உருவாகிறது. (AIIMS 2011)

1. கூற்று காரணம் இரண்டும சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்
2. கூற்று காரணம் இரண்டும சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல
3. கூற்று சரி ஆனால் காரணம் தவறு
4. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

105. கூற்று : பைலேரியல் புழு மனிதர்களில் பரவுவதற்கு காரணம் கியுலெக்ஸ் கொசு.

காரணம் : கியுலெக்ஸ் கொசுவானது நன்னீரிலே இனபெருக்கம் செய்யும். (AIIMS 2012)

1. கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது.
2. கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் இக்காரணம் இக்கூற்றை விளக்கவில்லை
3. கூற்று சரி, காரணம் தவறு.
4. கூற்று, காரணம் இரண்டும் தவறு.

106. கூற்று : HIV ரெட்ரோ வைரஸே AIDS நோய்க்கு காரணம்.

காரணம் : ரெட்டோ வைரஸ்கள் RNA மரபுப் பொருளை பெற்றுள்ளது (AIIMS 2012)

1. கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது.
2. கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் இக்காரணம் இக்கூற்றை விளக்கவில்லை
3. கூற்று சரி, காரணம் தவறு.
4. கூற்று, காரணம் இரண்டும் தவறு.

107. எந்த வகையான வெள்ளை இரத்த அணுக்கள் ஹஸ்டமைன் மற்றும் இயற்கை இரத்த உறைவு எதிர்ப்பு ஹெப்பரின் வெளியிடல் நிகழ்வில் தொடர்புடையவை (AIPMT 2008)

1. மோனோசைட்டுகள்
2. நியூட்ரோபில்கள்
3. ∴பேசோபில்கள்
4. ஈசனோபில்கள்

108. அதிக செயல்திறன் கொண்ட செல் விழுங்குதல் நிகழ்வு எந்தவகை வெள்ளை இரத்த அணுக்களால் ஏற்படுகிறது. (AIPMT 2008)

1. நியூட்ரோபில்கள் மற்றும் மோனோசைட்டுகள்
2. நியூட்ரோபில்கள் மற்றும ஈசோபில்கள்
3. லிம்போசைட்டுகள் மற்றும் மேரோபேஜ்கள்
4. ஈசஸோபில்கள் மற்றும் லிம்னோசைட்டுகள்

109. இயல்பு நோய் தடை காப்பில், வாயிலிருந்து உமிழ்நீர், கண்ணின் கண்ணீர் கீழ்கண்ட எந்த வகை நோய் தடை காப்பை ஏற்படுத்துகிறது? (AIPMT 2008)

1. உடல்செயல் சார்ந்த தடைகள்
2. சைட்டோசைன் சாந்த தடைகள்
3. செல் அளவிலான தடைகள்
4. உடற்செயல் சார்ந்த தடைகள்

110. கலம் 1-ல் உள்ள நோய்க்கு பொருத்தமான கலம் 2-ல் உள்ளவற்றை பொருத்து (நோய்கிருமி தடுப்பு/சிகிச்சை) (AIPMT 2008)

| கலம் 1 | கலம் 2 |
|---|---|
| 1. அமீபியாசிஸ் | (i) ட்ரிப்பனோமா பாலிடம் |
| 2. டிப்தீரியா | (ii) கிருமி நீக்கம் செய்யப்பட்ட உணவு, நீர் பயன்படுத்துதல் |
| 3. காலரா | (iii) DPT தடுபபூசி |
| 4. சிபிலிஸ் | (iv) நீரிழப்பு குறையாமல் தடுக்க நீர் அதிகம் எடுத்துக்கொள்ளல் |

1. 1- (ii), 2 (iii), 3 (iv), 4 (i)
2. 1- (i), 2 (ii), 3 (iii), 4 (iv)
3. 1- (ii), 2 (iv), 3 (i), 4 (iii)
4. 1- (ii), 2 (i), 3 (iii), 4 (iv)

111. கீழ்கண்ட வற்றுள் மனமகிழ்ச்சி மருந்திற்கு காரணமான கூற்றினை தேர்ந்தெடு (AIPMT 2008)

1. பார்பியுரேட்டுகள் உறவு மற்றும தற்காலிக மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது
2. ஹாசிஸ் சிந்தனை உணர்வுகள் மற்றும் மாயத்தோற்றத்தை ஏற்படுத்துகிறது
3. சூயிஸம் நரம்புமண்டலத்தை தூண்டுகிறது மற்றும் மாயத்தோற்றத்தை ஏற்படுத்துகிறது
4. மார்பின் மாலை மற்றும் தொந்தரவு உணர்ச்சிகளுக்கு வழி வகுக்கிறது

112. கூற்று : சாதாரண செல்களில் புரோட்டோ ஆங்கோஜீன்கள் உள்ளன

காரணம் : புரோட்டோ ஆங்கோஜீன்கள் செயல்படுத்தப்பட்டால் விலங்குகளில் வீரியமிக்க கட்டியை ஏற்படுத்தலாம் (AIIMS 25.05.19 FN)

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் உண்மை காரணம் சரியானது என்றால் அது கூற்றின் விளக்கமாகும்.
2. கூற்று, மற்றும் காரணம் இரண்டும் உண்மை காரணம் சரியானது என்றால் அது கூற்றின் விளக்கம் இல்லை
3. கூற்று சரியானது என்றால் காரணம் தவறு
4. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

113. கூற்று : ஓயியாய்டுகள் வரையறையின்றி பயன்படுத்தகூடிய ஒரு போதை மருந்து

காரணம் : இது வளர்சிதை மாற்றத்தை குறைத்து, மற்றும் மன மருட்சியையும் உருவாக்குகிறது (AIIMS 25.05.19 FN)

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் உண்மை காரணம் சரியானது என்றால் அது கூற்றின் விளக்கமாகும்.
2. கூற்று, மற்றும் காரணம் இரண்டும் உண்மை காரணம் சரியானது என்றால் அது கூற்றின் விளக்கம் இல்லை
3. கூற்று சரியானது என்றால் காரணம் தவறு
4. கூற்று, மற்றும் காரணம் இரண்டும் தவறு

114. சரியான விடையைத் தேர்வு செய்து கீழ் உள்ளவற்றை பொருத்துக. (AIIMS 25.05.19 AN)

| | | | |
|---|---|---|---|
| (a) |  | (i) | Cannabis |
| (b) |  | (ii) | Diacetyl morphine |
| (c) |  | (iii) | Hallucination |

1. (a)-i,( b)-ii,(c)-iii
2. a-ii,( b)-i,( c)-iii
3. (a)-iii, (b)-ii,(c)-I
4. (a)-i, (b)-iii,( c)-ii

115. சரியான கூற்றினை தேர்ந்தெடு. (AIIMS 25.05.19 AN)

1. யானைக்கால் நோயை ஏற்படுத்துவது டிரைக்கோடெர்மா
2. அமீபிக்சீதபேதி நோய்க்கு கடத்தியாக செயல்படுவது வீட்டு ஈ
3. மலேரியா நோயின் கடத்தியாக செயல்படுவது க்யூலெக்ஸ்
4. அஸ்காரியாசிஸ் நீர்த்துளி தொற்று மூலம் உருவாகிறது

116. கூற்று : வயிற்றுப்போக்கு நோயினை ஏற்படுத்தக் கூடியவைகள் – எஸ்செரிசியா கோலை, சைஜெல்லா சிற்றினம் மற்றும் சால்மோனெல்லா சிற்றினம்

காரணம் : அனைத்து விதமான வயிற்றுப்போக்கிற்கு நீரிழப்பு பொதுவானது மற்றும் தேவையான அளவு நீர்மம் மற்றும் எலக்ட்ரோலைட்ஸ் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(AIIMS 25.05.19 AN)

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி மற்றும் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்.
2. கூற்று, மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் இல்லை
3. கூற்று சரி ஆனால் காரணம் தவறு
4. கூற்று, காரணம் இரண்டும் தவறு

117. கூற்று : பாக்குலோவைரஸ், நியூக்ளியோபாலி ஹெட்டிரோ வைரஸ்க்கு உயிரி கட்டுபாட்டாளராக உள்ளது.

காரணம் : இவைகள் திறன்மிக்க தாவர தீங்குயிரி எதிரி ஆகும். (AIIMS 25.05.19 AN)

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி மற்றும் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்.
2. கூற்று, மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் இல்லை
3. கூற்று சரி ஆனால் காரணம் தவறு
4. கூற்று, காரணம் இரண்டும் தவறு

118. கூற்று : கேனாபினாய்டுகள் தடை செய்யப்பட்ட போதைப் பொருள்

காரணம்: இதய இயக்க தசையையும் மத்திய நரம்பு மண்டலத்தையும் பாதிக்கிறது.

(AIIMS 25.05.19 AN)

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி மற்றும் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்.
2. கூற்று, மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் இல்லை
